1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த கிராமங்களில், விதிகளின்படி, பொறுப்புகளை வகிக்க பொறுத்தமாக, அரிசனங்கள் முன்வருகிறார்களோ, அவர்கள் நியமிக்கப்படுவதில் ஆட்சேபணை கிடையாது.

ஒட்டன் கால்வாய் மராமத்து

*218 **வினா. திரு. எம். முத்தையா** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் வட்டம், சீழமங்கலம் கிராமத்தில் உள்ள ஒட்டன் கால்வாய்க் கரைகளைச் செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கீழமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த ஒட்டன்கால்வாயிலிருந்து சிப்பிகுளம் கண்மாய்க்கு செல்லும் பிரிவு கால்வாய் ஓரத்தில் ஏற்பட்ட உடைப்பும் ஒட்டன்காலில் ஏற்பட்ட உடைப்பும் மராமத்து செய்யப்பட்டு 16—8—1975-இல் முடிவு பெற்றது.

திரு. எம். முத்தையா : ஒட்டன்காலிருந்து கீழமங்கலம் பெரிய கண்மாய்க்கு நீண்ட காலத்திற்கு முன்னால் வெட்டப் பட்டது. இதுநாள் வரை அதை மராமத்து செய்யவில்லை. இப்போதாவது அதை மராமத்து செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப் பற்றி பொதுப் பணித் துறைக்கு எழுத வேண்டும்.

தூத்துக்குடி அனல் மின் திட்டம்.

*219 **வினா. திரு. கா. வேழவேந்தன்** :
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு

தொழில்—மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் பணிகள் எந்நிலையில் உள்ளன ?

(இ) எப்போது உற்பத்தி தொடங்கப்படும் ?

[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தூத்துக் குடியில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இந்திய அரசின் திட்ட ஆணைக்குழு தனது ஒப்புதலை அளித்தது.

துறைமுகத் திட்ட அதிகார மன்றத்திடமிருந்து 360 ஏக்கர் பரப்புள்ள நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கட்டுமானங்கள் அமைய வேண்டிய இடங்கள் முளையடிக்கப்பட்டு அடையாளமிடப் பட்டுள்ளன. பென்ச் மார்க், கிரிட் பில்லர் (இணைப்புத் தூண்) ஆகியவற்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் தெரிந்தெடுப்பதற்கான ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. நீரைக் குளிர வைப்பதற்கான இயந்திரத்திற்கும் கரியை எடுத்துச் செல்வதற்கான கருவிக்குமுரிய சாத்தியக் கூறு அறிக்கைகள் ஆலோசகர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. கொதிகலன்கள், சுழல் மின்உற்பத்தி இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கான ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன.

(இ) முதலாவது பிரிவு 1978 டிசம்பரிலும் இரண்டாவது பிரிவு 1979 ஜூலையிலும் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்நிலையத் திட்டப் பணிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேறு ஏதாவது தடைகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இதில் தடைகள் ஏதுமில்லை. நிதி கிடைப்பது தான் கஷ்டமாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, கேள்வியில் (பி) பிரிவுக்கு பதில் சொல்லப்படவில்லை. இந்த அனல் மின் நிலையம் எப்போது கமிஷன் செய்யப்படும்? இதற்குத் தேவையான உபகரணங்களை ராஞ்சி போன்ற பொதுத் துறையிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு வழி இருக்கிறதா ? அல்லது வெளி நாடுகளிலிருந்து தான் இறக்குமதி செய்ய வேண்டுமா ? இந்த வருஷம் மத்திய சர்க்கார் இதற்கு எவ்வளவு உதவி அளித்து இருக்கிறது என்பதை அறியலாமா ?

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின் திட்டம் 420 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு திட்டம். இதற்கு ஏற்படக்கூடிய செலவு 110 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது 210 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற அளவில் யந்திரங்களைக் கொண்ட ஒரு திட்டத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திடமிருந்து பாய்லர்களை வாங்க முடியும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்கு முன் பணமாக ரூ. 4,42,00,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசு ரூ. 10 கோடி ஒதுக்கினார்கள். நாம் இன்னும் 9 கோடி கேட்டோம். ரூ. 1 கோடி கொடுத்திருக்கிறார்கள். ஆக, ரூ. 11 கோடி தான் செலவிடப்பட சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, 20 அம்சத் திட்டத்தில் இந்த மாதிரியான திட்டங்களுக்கு பொதுத் துறைக்கு முன்னிடம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. எனவே மத்திய அரசிடம் மேற்கொண்டு பணத்தை கடனாகவாவது கேட்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாங்கள் ரூ. 9 கோடி கேட்டோம். அவர்கள் கொடுத்தது ரூ. 1 கோடி.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சில தினங்களுக்கு முன்பாக நமது முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி அளித்த விரை அறிக்கையில் இந்த மின் நிலையம் 1979-இல் தான் முடியக்கூடிய நிலை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு அண்மையில் எல்லா மாநிலங்களுக்கும் ஏறத்தாழ ரூ. 300 கோடிக்கு மேல் ஒதுக்கி இருந்தாலும் நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது மிகக் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று இந்த விவாதங்களை சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரிடத்தில் எடுத்துச் சொல்லி அதிகத் தொகையைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே நமது முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமரிடத்தில், ஒதுக்கி இருக்கிற தொகை போதாது என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மேலும் நமது அதிகாரிகள் டெல்லி போகும்போதெல்லாம் அங்கே இருக்கிற அதிகாரிகளைச் சந்தித்துச் சொல்லி இருக்கிறார்கள். நான் சில மாதங்களுக்கு முன்பு டெல்லி போன போது சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பார்த்துச் சொல்லி இருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : இந்த மின் உற்பத்தி நிலையம் தொழில்களுக்கு மிகவும் முக்கியமானது. எனவே, இந்த நிலையத்திற்காக பப்ளிக் லோன் ஃப்ளோட் பண்ணுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெறுவது பற்றி யோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப் போன்ற செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. எஸ். வடிவேல் : இந்த மின் நிலையத்தின் உற்பத்தி எப்போது துவங்கும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1978 ஆம் ஆண்டு டிசம்பரில் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது ? இதில் மாநில அரசின் பங்கு எவ்வளவு ? அதே நேரத்தில் நமது தமிழ் நாட்டில் இன்னும் பல்வேறு மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றனவா ? அதற்கெல்லாம் சேர்த்து மொத்தமாக எவ்வளவு கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மற்ற திட்டங்களைப் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. இந்த ஆண்டு மத்திய அரசை ரூ. 19 கோடி கேட்டோம். ரூ. 11 கோடி தான் கொடுத்திருக்கிறது.

•